## ஸ்ரம வாசனா நிதியம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

#### 1.1 அபிப்பிராயம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஸ்ரம வாசனா நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

#### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 சிறந்த கணக்கீட்டு நடைமுறைகள்

நேர்கோட்டு முறைமையின் பிரகாரம் ரூபா 340,222 கிரயத்திலான குளிரூட்டி, கணனி, போட்டோ பிரதி இயந்திரங்கள் என்பன மீளாய்வாண்டின் இறுதி வரை இறுதிப் பெறுமதி ரூபா 1 வரை பெறுமானத்தேய்விடப்பட்டிருந்ததுடன் அச் சொத்துக்கள் மீள் பெறுமதியிடப்பட்டு புதிய ஆக்கபூர்வமான ஆயுட்காலம் இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் பெறுமானத்தேய்வு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1998 இன் 12 ஆம் இலக்க ஸ்ரம வாசனா நிதிய அதிகாரசட்டம் | |
| (i) 6(அ) முதல் (ஏ) வரையான பிரிவுகள் | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்கு முரணாக ரூபா 781,332 தொகை விளம்பரச் செலவினமாகச் செலவிடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ii) | 7(2)(1)(அ) மற்றும் 13(2) ஆம் பிரிவுகள் | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஸ்ரம வாசனா எனும் பெயரில் அதிஷ்டலாபச் சீட்டு அச்சிடப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக "ஜாதிக சம்பத" எனும் பெயரிலான ஓர் அதிஷ்டலாபச் சீட்டு அச்சிடப்பட்டிருந்தது. |
| (iii) | 10(ஈ) பிரிவு | அதிஷ்டலாபச் சீட்டை நடாத்துவதன் மூலம் கிடைக்கப்பெறும் வருமானம் நிதியத்திற்குக் கிடைக்கப்பெற வேண்டிய போதிலும் 2008 பெப்ரவரி 28 ஆம் திகதியின் பின்னர் அவ்வருமானம் திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களத்தால் பெறப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் நிதிப் பிரமாணம்

---

| | | |
|---|---|---|
| (i) | நி.பி. 139(4) | விளம்பரச் செலவினமாக நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட ரூபா 1,346,307 தொகைக்காக முறையான பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | நி.பி. 139(8) | மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 381,000 தொகையான முற்பணங்கள் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நி.பி. 371 (2)(ஈ) | மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 121,000 தொகையான முற்பணங்களைத் தீர்ப்பதற்கு உரிய செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்டு ஒரு மாதத்திற்கும் மிகையான காலம் தாமதமடைந்திருந்தது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், நிதியத்தின் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவு ரூபா 47,201,339 தொகையான மிகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 40,218,167 ஆனமையால் ரூபா 6,983,172 தொகையான நிதிவிளைவில் அதிகரிப்பு காணப்பட்டது. மீளாய்வாண்டிற்கான செலவினம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் ரூபா 1.6 மில்லியன் தொகையால் அதிகரித்திருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 8.5 மில்லியன் தொகையால் அதிகரித்தமை இதற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது ஸ்ரமவாசன நிதியத்தின் செயற்பாட்டுத்திட்டம் மற்றும் செயல் முன்னேற்ற அறிக்கையைப் பரீட்சிக்கையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) நிதி மற்றும் பௌதீக இலக்குகள் எய்தப்படுவதிலான செயல் முன்னேற்றம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| நிகழ்ச்சித்திட்டம்/ தொகுப்பு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பீட்டு இலக்கு | | அடைந்துகொள்ளல் (செயற்பாடு) | | அடைந்துகொள்ளலின் செயல் முன்னேற்றம்) | |
|---|---|---|---|---|---|---|
| | நிதி | பௌதீக | நிதி | பௌதீக | நிதி | பௌதீக |
| | ரூபா மில். | நிகழ் | ரூபா மில். | நிகழ் | ரூபா மில். | நிகழ் |
| (i) தொழிநுட்பக் கல்வி நிகழ்ச்சித்திட்டம் | 0.6 | 20 | - | - | - | - |

(இந் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை.)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (ii) | அவசர வேளைகளில் தொழில் வழங்குனருக்கு மருத்துவ மற்றும் ஏனைய வசதிகள் வழங்கல் | 1.0 | 20 நோயாளிகளுக்காக | - | - | - | - |
| | | | | (இந் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை.) | | | |
| (iii) | சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1.0 | 100 நபர்களுக்கு சட்ட உதவி வழங்கல் | 0.07 | 18 நபர்களுக்கு சட்ட உதவி வழங்கல் | 7% | 18% |

(ஆ) ஸ்ரமவாசன நிதி அதிகாரச் சட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டிராமை

---

1998 இன் 12 ஆம் இலக்க ஸ்ரமவாசன நிதிய அதிகாரச்சட்டத்தின் பின்வரும் கீழ் தரப்பட்டுள்ள நடவடிக்கைகள் நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| | பிரிவு | எய்தப்படாத கட்டளை |
|---|---|---|
| (i) | 6 (ஆ) பிரிவு | சேவை வழங்குனர்கள் சேவையில் ஈடுபட்டிருக்கையில் நிறுவகம் முன்னறிவித்தல் இன்றி மூடப்பட்ட சந்தர்ப்பத்தின் போது அந் சேவை வழங்குனர்களுக்கு நிதி அல்லது வேறு உதவியளித்தல். |
| (ii) | 6 (இ) பிரிவு | அவசர சந்தர்பங்களில் சேவை வழங்குனர்களுக்கு மருத்துவ மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல். |
| (iii) | 6 (உ) பிரிவு | அவசர சந்தர்பங்களில் சேவை வழங்குனர்களுக்கு அல்லது அவர்களில் தங்கி வாழ்வோருக்கு நிதி மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல். |
| (iv) | 13 (1) பிரிவிற்கு | ஒவ்வொரு ஆண்டிலும் அச்சிடப்பட வேண்டிய |

லொத்தர்களின் எண்ணிக்கை மற்றும் வகை தொடர்பாக, லொத்தர் சபையுடன் உடன்பாட்டிற்கு வருதல்.

(v) 13(2) ஆம் பிரிவிற்கு — லொத்தரினால் வழங்கப்படும் பரிசு தொடர்பாகவும் உரிமை கோரப்படாத பரிசுகள் தொடர்பாகவும் செயற்பட்ட விதம் தொடர்பாக லொத்தர் சபையுடன் உடன்பாட்டிற்கு வருதல்.

(vi) 13(3) ஆம் பிரிவிற்கு — லொத்தரால் வழங்கப்பட வேண்டிய பரிசுப் பெறுமதி உள்ளடங்கலாக லொத்தர் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டிய செலவினம் தொடர்பாக நிதியம் மற்றும் லொத்தர் சபைக்கு இடையே உடன்பாடு ஏற்படுத்தப்படல்.

## 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் நோக்கங்களுக்கு முரணாக நிதியத்தால் வேறு நிறுவகங்களுக்கு ரூபா 1,102,000 தொகை பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருத்தல்.

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்கான மூன்று மருத்துவ சிகிச்சைகளுக்காக செயற்பாட்டுத்திட்டத்தின் பிரகாரம் ரூபா 1.5 மில்லியன் தொகையான மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அது பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் படி ரூபா 782,000 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது இதன் உள்ளபடியான செலவினம் ரூபா 602,293 ஆகக் காணப்பட்டது. 2012 மார்ச் 03 ஆம் திகதி நடாத்தப்பட்ட மருத்துவ சிகிச்சைக்காக உணவு கொள்வனவு செய்யப்பட்டு அதற்காகக் கொள்வனவுக் குழுவின் மேல் அங்கீகாரம் 2012 ஏப்ரல் 19 ஆம் திகதியே பெறப்பட்டிருந்தது. இங்கு உணவிற்காக தற்போதைய சந்தை விலைகளைப் பார்க்கிலும் கூடிய

விலைகள் செலவிடப்பட்டிருந்தன. பிலியன்தலையில் நடாத்தப்பட்ட சிகிச்சைக்காக வருகை அறிக்கையின் பிரகாரம் 28 பேரின் வருகை உறுதிப்படுத்தப்பட்டு 50 பேரைப்பார்க்கிலும் கூடிய நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகத்தின் தூரநோக்கும் செயற்பணியும் நிறைவேற்றப்படுவதற்காக 03 ஆண்டுகளுக்கு குறையாத காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டுத்திட்டம்

கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் மேற்கொள்ளப்படுவதற்காக வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் உள்ளகக் கணக்காய்விற்காக ஒரு கணக்காய்வாளர், தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சினூடாக நியமிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிதியத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) முற்பணக் கொடுப்பனவுகள்
(ஈ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு